# பிரேம வாஹினி

பகவான்

ஸ்ரீ சத்ய சாயி பாபா

30. Eternal Religion: The Divine Mother of Humanity

## மனித சமுதாயத்தின் தெய்வீகத் தாய் சனாதன தர்மம்:

எல்லா மதங்களுக்கும் எல்லா நீதி நெறிகளுக்கும் இவ்வுலகின் எல்லா தர்மங்களுக்கும் தாய் சனாதன தர்மமே; அந்தத் தாயின் பிறந்த வீடு பாரத தேசம். ஆஹா! எத்தனை அதிர்ஷ்டசாலிகள் இந்த பாரததேசத்தினர்! எத்தகைய ஆன்மீகப் பெருமை மிக்கது இந்த பாரத தேசம்!

இந்த உலகம் முழுவதும் இறைவனின் உடலாகும். அவ்வுடலின் இணையிலா உறுப்பான கண்ணாகும் இந்த பாரத தேசம். கண் இல்லாமல் உடலால், உடலை ஆள இயலாது; இல்லையா? வேதங்கள், சாத்திரங்கள் ஆகிய இரு கண்களால் பாரத தேசம் மேலும் அழகுடன் திகழ்கிறது. அதனால்தான் பாரத நாட்டு மக்கள் அடைந்துள்ள சம்ஸ்காரங்களை வேறு எந்த நாட்டினரும் அடையவில்லை என்று சந்தேகத்துக்கு இடமில்லாதபடி பிரகடனப் படுத்தப்பட்டது. எல்லா மதங்களுக்குரிய சத்தியத்தையும் அனைத்துச் சமயங்களுக்குமுரிய சகிப்புத்தன்மையையும் மனித சமுதாயம் அனைத்துக்கும் போதிப்பது சனாதன தர்மமே. பல பகுதிகளில் பிறந்த ஆறுகள், பல்வேறு இடங்களில் பாய்ந்து, இறுதியில் சமுத்திரத்தை அடைகின்றன. அதைபோலவே பல்வேறு நாடுகளில் பிறந்த மக்கள், பலவகையான வழிபாடுகளைப் பின்பற்றி, பற்பல தர்மங்களைக் கையாண்டு இறைவனின் சன்னிதானம் எனும் சமுத்திரத்தை அடைகின்றனர். சனாதன தர்மத்தை மையமாகக் கொண்டே பல்வேறு திசைகளில் செல்லும் இந்த வேறுபட்ட மார்க்கங்கள் இறுதியில் ஓரிடத்தில் ஒன்று கூடுகின்றன. எந்த சமயத்தைச் சார்ந்தவராக இருப்பினும் சத்தியத்தைப் பேசி, பொறாமை, சினம் அகற்றி, கனிவான இதயத்துடன் எப்போதும் செயலாற்றுவதன் மூலம் இந்த சனாதன தர்மத்தைப் பின்பற்ற இயலும். சனாதன தர்மத்தை தவறாமல் பின்பற்றி வெற்றிபெறுபவர் யாராக இருப்பினும் அவர் பாரத தேசத்தவர் என அழைக்கப்படும் தகுதி உடையவர் ஆவார்.

31. Bharath is the home of the Eternal Universal Religion

## ஸனாதன தர்மத்தின் இருப்பிடம் பாரதம்

அனைத்து மதங்களுள் ஆதி நாள் முதல் நிரந்தரமாக நிலைத்து நிற்பதில் முதல் இடம் பெறுவது இந்து மதம் மட்டுமே. வரலாற்று நிகழ்ச்சிகளால் அழிக்கப்படாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் இந்துக்கள் மட்டுமே. அன்பு, சமத்துவம், நன்றி ஆகியவற்றை மற்ற மதங்களை விட அதிகமாக வாழ்வில் கடைபிடித்துக் காட்டுவது இந்த மதம்தான். வேதங்கள் மூலம் தத்துவக்கோட்பாடுகளைக் கண்டுபிடித்து தங்கள் தர்மத்தை சேமித்தவர்கள் இந்துக்கள். முதலும் முடிவுமில்லா வேதங்களின் சாரத்தை அதன்

அடிமட்டத்திலிருந்து அவர்கள் பருகியிருக்கிறார்கள். இத்தனை புனிதம் மிக்க இந்த மண்ணில்தான் உலகுக்கு அளிக்கக்கூடிய அற்புதமான ஆன்மீகச் சுரங்கம் உள்ளது. ஒவ்வொரு சுரங்கமும் அந்தந்தப் பகுதிக்கேற்ப வேறுபட்ட உலகங்களைத் தன்னகத்தே பெற்றிருப்பது போல பாரத தேசம் சனாதன தர்மம் எனும் சுரங்கத்தைப் பெற்றிருக்கிறது; அனைத்து விதமான சாத்திரங்கள், வேதங்கள், உபநிஷதங்களில் காணப்படும் கோட்பாடுகள் அனைத்தின் சாரமே சனாதன தர்மம்.

சனாதன தர்மம் எனும் சுரங்கத்தைத் தங்கள் இல்லமாகக் கொண்டவர்கள் பாரத தேசத்தினர். அது தோன்றி நீண்ட நெடுங்காலமாகிறது; அந்த நொடி முதல் (இந்நாட்டினரின் தவப்பலனுக்காகத் தோன்றியதைப் போன்று) அந்த சனாதன தர்மத்துக்காகவே தலைவர்களும் சிந்தனையாளர்களும் விமர்சிப்போரும் இறைத்தூதுவர்களும், குருமார்களும் இந்த மண்ணிலேயே தோன்றிய வண்ணம் இருக்கிறார்கள். அத்துடன் முனிவர்களும், தன்னலமற்ற கர்ம யோகிகளும், அறிஞர்களும், தன்னையறிந்த மகான்களும், இந்த சமயத்துக்குத் தொடர்புடைய தெய்வீக மனிதர்களும் இந்த பாரத தேசத்தில் தான் தோன்றினார்கள். இவர்களுடைய அனுபூதிகள் மூலம் புத்துணர்ச்சி பெற்ற ஆன்மீக விவேகம் இந்த நாடு முழுவதும் பாய்ந்தது. இப்படியாக சாரம் மிக்க சனாதன தர்மம் உலகம் முழுவதும் பரவியது; ஆனால் அது எந்த நாட்டுக்குப் பரவியபோதும் அதன் தாய்வீடு பாரதம்தான்.

இன்றைய உலகைப் பாருங்கள். புதிய அல்லது வேறு பாணியில் செய்யப்பட்ட இயந்திரங்கள், கார்கள், என்ஜின்கள் முதலியவை ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன; இருப்பினும் அவைகளின் தாய் நாட்டை மறக்க முடியாது. அந்த இயந்திரங்களும், கார்களும் அனுபவத்தின் அடிப்படையில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன; அந்த அடிப்படை இல்லாமல் எதையும் செய்யமுடியாது. அதைப்போன்றுதான் சனாதன தர்மமும் பாரத தேசத்தில் உருவானது; இந்நாட்டில் தோன்றிய பெரிய மகான்கள் மூலமும் அவர்கள் உருவாக்கிய நூல்கள் மூலமும் அது ஊற்றெடுத்து பிற நாடுகளில் வெள்ளமாகப் பாய்ந்து அந்நாட்டு மக்களுக்கு நன்மையளித்தது. எனவே அடிப்படையான தாய் வீட்டை அசட்டை செய்துவிட இயலாது; முடியாது.

32. Eternal Vedic Religion is the heritage of all mankind

### சனாதன வேத தர்மம் என்பது மனிதகுலத்தின் பாரம்பரியம்

ஆனால் இன்றைய நிலையைப் பார்க்கும்போது அது சற்று கவலையளிக்கிறது. தூய்மையான தர்மத்தை உருவாக்கி வளர்த்த புனிதமான மகான்கள் தோன்றிய இந்த பாரத மண்ணில் புதிய முறைகள் ஒருவரின் சுயதர்மமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன; சனாதன தர்மம் இந்நாட்டில் ஓரம் கட்டப்பட்டு, அந்த தர்மத்தின் இனிமையை சுவைத்தறியாது, பொருள் புரியாது, அதை வெறுமனே

வாதம் செய்து காலத்தை விரையமாக்கிக் கொண்டிருந்த பிற நாட்டு மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் முறையாக வழிகாட்டும் குருமார்கள் இல்லாததே ஆகும். அப்படிப்பட்ட குருமார்கள் கிடைத்தாலும் மக்கள் நவநாகரிக நடைமுறைகளில் மோகம் கொண்டு அவற்றின் மீது பற்று வைக்கின்றனர். உண்மையில் இவைகள் கடைத்தெருவின் பக்கோடாக்களைப் போன்றவை; அவைகள் தமது 'கமகம' வாசனையால் கவர்கின்றன; ஆராயாத மனிதர்கள் அவற்றை வாங்குகின்றனர். அவர்களுடைய சுயதர்மம் சனாதன தர்மமாக இருந்தபோது, புறத்தோற்றத்தில் மயங்கியதன் காரணமாக அதை மறந்து விடுகின்றனர்; எனவே அதைப் புறக்கணிக்கவும் செய்கின்றனர். சத்தியத்துக்கு அப்படிப்பட்ட அலங்காரங்கள் தேவையில்லை. சுவைதான் அதில் முக்கியமானது. அதன் அடிப்படைக்காரணம் வெளிமயக்கிலும், தோற்றத்திலும் இன்றைய மனிதர்கள் கொள்ளும் மோகமே; அதனால் அவர்கள் கவரப்படுகிறார்கள். உண்மையை ஒதுக்குவதும் பிறரது தர்மத்தை ஒப்புக்கொள்வதும் பழக்கமாகி விட்டது. இது ஒரு பெரிய தவறு. புறத்தோற்றத்தின் மீதும் காட்சியின் மீதும் பற்றுவைப்பது பாரத தர்மத்துக்கு முரண்பட்டது. சனாதன தர்மத்தில் அடங்கிய சத்தியம், அதி உன்னதமான அன்பைவிட மேலானது, அப்பாற்பட்டது; அது வேறு எந்த தர்மத்திலும் இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை. சத்தியத்தின் இருப்பிடம் சனாதன தர்மம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். அனைவர்க்குமுரிய பாராம்பரியம் அது. புனிதத்தன்மைக்கு எல்லை இருக்க முடியாது. ஒரு நொடி இடைவெளிகூட இல்லாத அளவிற்கு அத்தனை புனிதம் மிக்கது.

சனாதன தர்மத்தைப் பின்பற்றி இப்பிறவியில் முக்தி அடைந்தவர்கள், இறையருள் பெற்றவர்கள், சத்தியத்தின் இயல்பை அறிந்தவர்கள், தன்னையறிந்தவர்கள் அனைவரும் பாரதர்களே. ஜாதி, இனம், ஆண், பெண் எனும் வேறுபாடில்லாத புனித நிலையை அடைந்தவர்களைப் போற்றுபவர்கள் பாரதர்களே. அப்படிப்பட்ட புனித நிலையானது மேற்படி வேறுபாடுகளைப் பஸ்பமாக்கிவிடுகிறது. அந்த நிலையை அடையும் வரையில்தான் அனைத்தையும் சமமாக பாவிப்பது முடியாததாகிறது. எனவே சனாதன தர்மத்தை உணர்வதற்குத் துணிவுடன் இறங்குவது அவசியமாகிறது. இது பாரதியர்களின் பிறப்புரிமையாகும்.

33. Divine personalities predominate in Bharath

## தெய்வீக புருஷர்கள் பாரதத்தில் முன்னிலை வகித்தனர்

வரலாற்றை அதன் ஆரம்பத்திலிருந்து ஆராய்ந்தால் இந்துக்களின் எந்தப் பிரிவில், எப்படிப்பட்ட மகான்கள் தோன்றினர் என்பதை நாம் விளக்கமாக அறிய முடியும். ராமர், கிருஷ்ணர், பலராமர், ஜனகர், பரிக்ஷித் முதலிய அவதார புருஷர்களும், தெய்வீக அடியார்களும், ஜீவன் முக்தர்களும் விஸ்வாமித்திரர்

போன்ற ராஜ யோகிகளும் க்ஷத்திரியர்களிடையே தோன்றியவர்கள், பிரம்மரிஷிகள், பெரிய பண்டிதர்கள், சாத்திர வல்லுநர்கள், வேதரிஷிகள் முதலியோர் பிராமணர்களிடையே தோன்றியவர்கள். பாரதம், பாகவதம் முதலிய இதிகாசங்களில் முன்னணியில் இருப்பவர்கள் சூத்திரர்கள். இறைவனிடம் பெரும் பக்தி செலுத்தியவர்களில் பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களிடையே தோன்றியவர்கள். உலகால் பாதிக்கப்படாமல் புனித்தன்மையைப் பெறவும் பரமாத்மாவை அடையவும் ஒவ்வொருவர் சாதனையும் இன்றியமையாதது தான்; ஜாதி, இனம் முதலிய மற்ற விஷயங்கள் அதற்குத் தடையாக இருக்கவே இருக்காது. ஆனால் அருள் பெறுவதற்குரிய தகுதியை ஒருவர் அடைந்தாக வேண்டும்; அதற்கு முறையான, கட்டுப்பாடான பயிற்சியைப் பழக வேண்டும்.

மேலே குறிப்பிட்ட மகான்களின் வாழ்க்கைக் கோட்பாடுகளை அசட்டை செய்ததன் மூலமும் அவர்களுடைய அறிவுரைகளை கவனியாமல் பின்பற்றாமல் இருந்ததன் மூலமும் (கேடு வரும் முன்னே, மதிகெட்டு வரும் பின்னே எனும் முதுமொழி போல்) காலத்தின் கோலம் மாறியதற்காக அவர்கள் வாழ்ந்த முறையை மாற்றியமைத்ததன் மூலம், பெயருக்கும், புகழுக்கும் அடிமையானதாலும் தங்கள் மக்கள் மனைவியின் முன்னேற்றத்திற்காக சுய நலமிக்க வழிமுறைகளைப் பின்பற்றியதாலும் பல பாரதர்கள் இப்போது முடிவிலா அவமானத்தை இந்து மதத்துக்கு இழைக்கின்றனர். அனைவரையும் சமமாகப் பாவிப்பவர்களும் சுய நலமற்றவர்களும், அனைவரது நலமும் மேம்பட உழைப்பவர்களும் மனித சமுதாய சேவைக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்களும் எதையும் தியாகம் செய்ய தயாராக இருப்பவர்களும் இப்போதும் எண்ணற்றவர் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள்; அவர்கள் பாராட்டப்படுவதில்லை அல்லது உயர் நிலையில் வைக்கப்படுவதில்லை; ஏனெனில் அதன்பின் அக்கிரமக்காரர்களுக்கும் அநியாயம் செய்வோருக்கும் குறுகிய மனம் படைத்தோருக்கும் இடம் இருக்காது என்ற பயம்தான்.

கடல் எத்தனை ஆழமும் அகலமும் உடையதாக இருப்பினும் அதன் அடியில் நில அதிர்ச்சி ஏற்படின் நீர் பிரிந்துவிடும். அதிர்ச்சி தணிந்த பின்புதான் அந்த நீர்பரப்பு மீண்டும் தன் மூலநிலையை அடையும். அதைப்போலவே இந்த நல்ல மனிதர்களும் அநியாயம், அதர்மம், சுயநலம், பகட்டு எனும் நில அதிர்ச்சியில் சிக்கிக்கொள்ளாமல் தனித்து நிற்கிறார்கள்; குழப்பம் தணிந்த பின் அவர்கள் உலகுக்குத் திரும்புகின்றனர். அதிகார தோரணையும் தற்புகழ்ச்சியும் நிலையற்றவை. விரைவில் மறையக்கூடியவை; “வீக்கமுற்றால் வெடித்து விடும்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. தற்போதைய அமைதியின்மை அழிவேயன்றி, ஆக்கமல்ல. பாரதர்கள் ஆதிமுதல் எப்படி தூய்மையான உணர்வுகளுடன் ஒழுக்கத்துடன் சுயக்கட்டுப்பாடு, மரியாதை, நற்பெயருடன் வளர்ந்தார்கள் என்பதையும் வேதங்கள், சாத்திரங்கள், உபநிடதங்கள் எனும் தாய்ப்பாலால்

பேணப்பட்டனர் என்பதையும் தங்கள் சொந்த நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டவர்களைக்கூட அவர்கள் எப்படி வரவேற்றனர், மரியாதை செய்தனர் என்பதையும் அவர்களிடமும் எப்படி சமமான அன்பை அருள்பாலித்தனர் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

பாவபயம், கடவுள்பயம், கட்டுப்பாடு, மரியாதை, ஆழ்ந்த நம்பிக்கை முதலியவை இன்மை காரணமாக இன்று சுயநலம், அதிகாரப்பற்றுடன் சொந்த சகோதரர்களை நிந்திக்கின்றனர் என்பதையும் மற்றவரின் வளத்தைப் பார்த்துப் பொறாமைப்படுவதையும் பேராசை, சுயநல வெறிகொண்டு தங்கள் சொந்த சகோதரர்களையே ஏமாற்றுவதையும், பிறர்நலத்தில் உண்மையான நாட்டம் கொண்டோரை தூரத்தில் நிறுத்தி வைப்பதையும், அவரவர் சுயநலத்தையே ஒவ்வொருவரும் குறிக்கோளாகக் கொள்வதையும் இதுவரை கேள்விப்படாத தீய குணங்கள் இந்துக்களிடம் பெருகுவதையும் தவறான வழிகளையும் முறைகளையும் பின்பற்றி வாழ்வதையும் அதனால் குழப்பமும் அமைதியின்மையும் வழக்கமாகி விட்டதையும் கவனியுங்கள். உள்ளபடியே படுபாதகமான வீழ்ச்சி இது.

34. Awake, Arise, and Tread the Path of Love and Devotion

## விழிப்படையுங்கள்! எழுங்கள்! அன்பு, பக்தியுடனான பாதையில் நடைபோடுங்கள்

இந்து சகோதரர்களே! பாரதப் புதல்வர்களே! சனாதன வழியைப் பின்பற்றுபவர்களே! தொன்மையான மானிட இயல்புகள் எங்கே போய்விட்டன? சத்தியம், சகிப்புத்தன்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றையெல்லாம் நீங்கள் எப்போது ஏற்றுக்கொள்ளப் போகிறீர்கள்? எழுங்கள்! விழிப்படையுங்கள்! சத்யம், தர்மம், சாந்தி நிரம்பி வழியும் ராமராஜ்யத்தை மீண்டும் நிலை நாட்டுங்கள். உங்கள் பாரத சகோதரர்களை நேசியுங்கள். சனாதன தர்மத்தை நடைமுறைப்படுத்துங்கள். அறியாமை சுடர்விட்டு ஒளிர்வதைத் தணியுங்கள்; அமைதியின்மை, அநியாயம், பொறாமைத் தாகங்களை சத்யம், சகிப்புத்தன்மை, அன்பு எனும் நீர்களால் தணியுங்கள். பரஸ்பர உணர்வை வளருங்கள். பொறாமை, சினம் அனைத்தையும் துடைத்தெறியுங்கள். புனித மகான்களின் நியதிகளையும் இறையாட்சியையும் இறைவனின் மிகமிக உன்னதமான சிறப்பியல்புகளையும் நினைவில் நிறுத்துங்கள். ஒவ்வொருவரும் தன் சொந்தத் தவறுகளை உணரவேண்டும்; மற்றவர்களுடைய குறைகளைத் தேடுவதால் ஒரு பயனுமில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அது வெறும் வெற்றுப் பொழுதுபோக்கு என்பதுடன் சச்சரவுகளையும் வளர்ப்பதாகும். எனவே அந்த குணத்தை விட்டுவிடுங்கள். இத்தருணம் தப்பினால் எத்தருணம் வாய்க்குமோ? மனம் தளர்ந்திட வேண்டாம். கடந்த கால அநீதிகள் அனைத்தையும் முடிந்து போனவைகளாகக் கருதுங்கள். மனமுருகி வருந்துங்கள், வழிபாடுகள் மூலம்

சகோதர அன்பு மூலம் நற்கருமங்கள் மூலம் இறைவனை நோக்கிச் செல்லுங்கள். ராமராஜ்யத்தை நிரந்தரமாக நிலை நாட்டுங்கள்.

இந்த ராஜ்யத்தை வெற்றிகொள்ள 'சனாதன சாரதி' புறப்பட்டு விட்டார். அந்தச் சாரதியின் சேனை சொல்லாலும் செயலாலும் இச்செயலுக்கு உறுதுணையாக நிற்கும். அந்தத் தேரை முன்னேற்றப்பாதையில் இழுத்துச் செல்லுங்கள்! இடுப்புத் துணிகளை வரிந்து கட்டுங்கள். நாரயணனைச் சரணடையத் தொடங்குங்கள்... பரதர்கள் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள், அவள் பெயர் சனாதன தர்மம்; தாயை அவள் பட்ட கடனிலிருந்து மீட்டுங்கள், தாயை மறப்பவன் சேய் அல்லன். தாய் தீயவள் என்று சொல்பவன் நல்லவன் அல்லன். அவளுடைய தாய்ப்பால்தான் நம் வாழ்வின் உயிர்மூச்சு.,.. இந்த வாழ்வை நமக்கு அளித்தவள் அவள், பரமாத்மா நம் அனைவரின் தந்தை.

நாம் அனைவரும் ஒரு பெற்றோரின் புதல்வர்கள். எனவே ஒருவரை ஒருவர் குறை கூறாமல், வசைபாடாமல், உற்றார் உறவினருக்கு தீங்கு நினைக்காமல், விரும்பும் பொருட்கள் மீது நீங்கள் வைத்திருக்கும் பற்றைப் போலவே மற்ற சகோதரர்களும் வைத்திருக்கிறார்கள் என்பதைப்புரிந்து கொள்ளுங்கள். ஒருவர் விரும்பும் ஒன்றை மற்றவர் குறைகூறக்கூடாது; அல்லது எள்ளி நகையாடக்கூடாது. அதற்கு மாறாக நீங்கள் அதை நேசிக்க முயலவேண்டும். இவைகள்தான் பாரதர்களின் சத்தியத்திலும் அன்பிலும் காணப்படும் சிறப்பியல்புகள்.